Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 180

திங்கட்கிழமை
25 மே 2026

வைகாசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

**951,742 சுற்றுலாவிகள் 5 மாதங்களில் வருகை**

விரிவு பக்கம்:-05

# சர்வகட்சி அரசாங்கத்துக்கு திரை மறைவில் நகர்வுகள்?

*பரபரப்பில் கொழும்பு அரசியல்*

**கொழும்பு, மே 25**
**சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான பேச்சுகள் திரைம றைவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு அரசியல் வட்டா ரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.**

»11

## சர்வகட்சி அரசு முயற்சி எதிர்க்கட்சிகளின் புரளி

*பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு*

கொழும்பு, மே 25
சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்குரிய முயற்சி இடம் பெறுவதாக வெளியாகும் தகவல்கள் அப்பட்டமான பொய் என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.
சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் உத

»11

## மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டில் நடக்காது

*மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் திட்டவட்டம்*



யாழ்ப்பாணம், மே 25
இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்று மக்கள் விடு தலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
மாகாண சபைத் தேர்தலுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்ட நிதி, அனர்த்த நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்பட் டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத் தில் தேசிய மக்கள் சக்தியின் மக் கள் தொடர்பு அலுவலகத்தைத் திறந்து வைத்ததன் பின்னர், "மாகாண

»11

## தீர்மானிக்கும் அதிகாரம் ரில்வினுக்கு இல்லை!

*நாமல்*

கொழும்பு, மே 25
தேர்தலை நடத்தும் காலம் தொடர்பில் தீர்மா னம் எடுக்கும் அதிகாரம் ஜே.வி.பியின் செயலாள ருக்கு எவ்வாறு கிடைத் தது? என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட் சியின் தேசிய அமைப்பா ளர் நாமல் ராஜபக்ச

»11

## மாகாணத் தேர்தலுக்கு அனைத்துமே தயார்

*தேர்தல்கள் ஆணைக்குழு*

கொழும்பு, மே 25
மாகாண சபைத் தேர் தலை நடத்துவதற்கு அனைத்து வழிகளிலும் தயாராக உள்ளதாக தேர் தல்கள் ஆ ணைக் குழு உத்தியோகபூர்வமாக அறி வித்துள்ளது.
மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கா க, வெளிவிவ கார அமைச்

»11

## மூளைக்காய்ச்சலால் பஸ் சாரதி சாவு

யாழ்ப்பாணம், மே 25
தனியார் பஸ் சாரதி ஒருவர் மூளைக்காய்ச்சலால் உயி ரிழந்துள்ளார்.
அளவெட்டியைச் சேர்ந்த பா.சுபாஸ்கரன் கடந்த 20 ஆம் திகதி கடமைக்குச் சென்றபோது வலிப்பு ஏற் பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
நேற்று இரவு அவர்

»11

## ஆஸி., நியூஸிக்கு பறக்கிறார் விஜித



கொழும்பு, மே 25
வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ளார்.
இரு நாடுகளும் விடுத்த அழைப் பின் பிரகாரம் அவர் நாளை முதல் ஜூன் 3 ஆம் திகதி வரை இந்தப் பயணத்தை

»11

## நாட்டுக்குள் நுழைகின்றது தென்மேற்கு பருவப்பெயர்ச்சி

கொழும்பு, மே 25
தென்மேற்குப் பருவப்பெ யர்ச்சிக் காலநிலை நாளை அல்லது நாளை மறுதினம் நாட்டை வந்

»11

## இயலுமென்றால் பஸிலை நாட்டுக்கு அழையுங்கள்!

*நாமல் ராஜபக்சவுக்குச் சவால்*



கொழும்பு, மே 25
பஸில் ராஜபக்சவை முடிந்தால் நாட்டுக்கு அழைத்து வாருங் கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வுக்கு, பிரதி அமைச்சர் பிர

»11



## திடீரென உச்சம் பெற்றது இலங்கை ரூபா பெறுமதி

கொழும்பு, மே 25
கடந்த வாரம் வீழ்ச்சி யடைந்து வந்த இலங்கை ரூபாவின் மதிப்பு, கடந்த வெள்ளிக்கிழமை அமெ ரிக்க டொலருக்கு நிகராக 2.7 வீதத்தால் குறிப்பிடத் தக்க அளவில் அதிகரித் துள்ளதாக 'ப்ளூம்பேர்க்' இணையத்தளம் தெரிவித் துள்ளது. இது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக் குப் பின்னர் ரூபா பதிவு

»11

## 226 பேருக்கு எதிராக சிவப்பு அறிவித்தல்!

கொழும்பு, மே 25
வெளிநாடுகளில் பதுங்கியி ருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினர்கள் உட்படப் பல்வேறு குற்றச்சாட் டுகளுடன் தொடர்பு

»10

## மூச்சுத் திணறலால் 4 மாதக் குழந்தை பலி

யாழ்ப்பாணம், மே 25
மூச்சுத் திணறலுடன் மருத்துவமனையில் சேர்க் கப்பட்ட 4 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது.
வறணி, இயற்றாலையைச் சேர்ந்த தவகுமார் பஸ்நிலன் என்ற 4 மாதக் குழந்தையே உயிரிழந் துள்ளது.
மூச்சு விடச் சிரமப்பட்ட நிலையில்

»11

**முச்சந்தி முராளி**

"அப்ப இவையளும் முந்தின அரசாங்கம் மாதிரி லெக்சனை வைக்காமல் இழுத்தடிக்கப்போயினம் எண்டது சரிதான் கண்டியளோ"

மக்கள் ம... ...மிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **கொவிசெத** | திகதி | 24.05.2026 |
| | சீட்டிழுப்பு இலக்கம் | 4441 |
| | ஆங்கில எழுத்து | O |
| | வெற்றி இலக்கங்கள் | 10 22 40 50 |
| | விசேட எழுத்து | O |
| **ஹந்தஹரண ராசி சுப பலன்** | திகதி | 24.05.2026 |
| | சீட்டிழுப்பு இலக்கம் | 1508 |
| | வெற்றி இலக்கினம் | மேஷம் |
| | வெற்றி இலக்கங்கள் | 04 18 31 41 |
| **NLB ஜய** | திகதி | 24.05.2026 |
| | சீட்டிழுப்பு இலக்கம் | 0467 |
| | ஆங்கில எழுத்து | H |
| | வெற்றி இலக்கங்கள் | 0 6 8 0 |
| **மெகா பவர்** | திகதி | 24.05.2026 |
| | சீட்டிழுப்பு இலக்கம் | 2547 |
| | ஆங்கில எழுத்து | B |
| | சுப்பர் இலக்கம் | 03 |
| | வெற்றி இலக்கங்கள் | 30 32 33 37 |
| **மஹஜன சம்பத** | திகதி | 24.05.2026 |
| | சீட்டிழுப்பு இலக்கம் | 6199 |
| | ஆங்கில எழுத்து | A |
| | வெற்றி இலக்கங்கள் | 4 7 8 1 3 0 |
| **தன நிதானய** | திகதி | 24.05.2026 |
| | சீட்டிழுப்பு இலக்கம் | 2229 |
| | ஆங்கில எழுத்து | V |
| | வெற்றி இலக்கங்கள் | 05 23 36 63 |
| | விசேட எழுத்து | V |
| **சுப தவசக்** | திகதி | 24.05.2026 |
| | சீட்டிழுப்பு இலக்கம் | 0315 |
| | வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| | வெற்றி இலக்கங்கள் | 37 41 50 |

# உலகளாவிய நெருக்கடிநிலை; இன்று கூடுகிறது மத்திய வங்கி

கொழும்பு,மே 25

**இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வகுப்புக் குழுவான நாணயக் கொள்கைச்சபை நாட்டின் தற்போதைய நிதிநிலைமைகளை மறுஆய்வு செய்வதற்கான தனது விசேட கூட்டத்தை இன்று திங்கட்கிழமை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.**

கூட்டத்தில் நாட்டின் தற்போதைய பொருளாதாரப்போக்குகள் ஆழமாக ஆராயப்பட்டு, கொள்கை வட்டி வீதங்கள் தொடர்பில் மிகமுக்கியமான மற்றும் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகளாவிய எரிசக்தி விலையேற்றம் மற்றும் கப்பல் போக்குவரத்து விநியோகத் தடைகள் காரணமாக, நாட்டின் பணவீக்கம் 2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்குள் 5 சதவீதத்தைக் கடந்துள்ளது.

இலங்கை அண்மைக்காலமாகப் பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்ந்து வரும் பின்னணியில், தற்போதைய உலகளாவிய சவால்களுக்கு மத்தியிலேயே இந்த அவசரக் கூட்டம் கூடுகிறது.

இந்தக் கூட்டத்தின் தீர்மானம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு இலங்கை மத்தியவங்கியின் உத்தியோகபூர்வமான இணையத்தளத்தில் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

| | | | |
|---|---|---|---|
| **சுபிரி தன சம்பத** | திகதி 24.05.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம் 0907 |
| DLB | ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 8 0 5 1 6 9 | |
| **Super Ball** DLB | திகதி 24.05.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| | சீட்டிழுப்பு வாரம் 3173 | ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 30 66 70 71 |
| **சனிதா** DLB | திகதி 24.05.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| | ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 12 26 67 75 | வெற்றி வாரம் 5334 |
| **SASIRI** DLB | திகதி 24.05.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| | வெற்றி வாரம் 1003 | வெற்றி இலக்கம் 12 27 28 | |
| **லக்ன ராசி** DLB | திகதி 24.05.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| | மகரம் | வெற்றி இலக்கம் 22 38 40 62 | சீட்டிழுப்பு வாரம் 4885 |
| **KAPRUKA** DLB | திகதி 24.05.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| | ஆங்கில எழுத்து V / சுப்பர் இலக்கம் 13 | வெற்றி இலக்கம் 38 41 51 75 | வெற்றி வாரம் 2349 |
| **அத கோடிபதி** DLB | திகதி 24.05.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| | ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 11 14 24 30 | வெற்றி வாரம் 2999 |

## 18 தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையிட்டவர் கைது!

கொழும்பு,மே 25

சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான 18 தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையிட்ட நபர் ஒருவரை, மேல் மாகாண தெற்குப் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் கொள்ளைக்காகப் பயன்படுத்திய திருடப்பட்ட 2 மோட்டார் சைக்கிள்கள், கொள்ளையடிக்கப்பட்ட 18 தங்கச் சங்கிலிகள் மற்றும் கைது செய்யப்படும் போது அவரிடமிருந்த 17 கிராம் 800 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் மஹரகம, ஹோமாகம, மீகொட, மிரிஹான, கொட்டாவ மற்றும் மாலபே ஆகிய பொலிஸ் பிரிவுகளில், மோட்டார் சைக்கிள்களில் பயணித்த பெண்களின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலிகள், மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரால் கொள்ளையிடப்பட்டதாக கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகளுக்கமைய இந்தச் சந்தேகநபர் சிக்கியுள்ளார்.

கொள்ளையடிக்கப்பட்ட அனைத்துத் தங்க நகைகளையும் மஹரகம பிரதேசத்திலுள்ள ஒரேயொரு அடகு வைக்கும் நிலையத்துக்கு அவர் விற்பனை செய்துள்ளார். குறித்த சந்தேகநபர் 'ஐஸ்' போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## இலங்கையின் பொருளாதாரம் நாணயநிதியத்தால் மீளாய்வு

கொழும்பு,மே 25

நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தின் கீழான இலங்கையின் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஒருங்கிணைந்த மீளாய்வுகளை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை பரிசீலிக்கவுள்ளதாக சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் இவான் பாபகோர்ஜியோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டுகளில், இலங்கையின் அதிகாரிகள் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதிலும், நாட்டின் கையிருப்புகளை மீண்டும் கட்டியெழுப்புவதிலும், நம்பிக்கையை வலுப்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளனர்.

இந்த முயற்சிகள் பொதுமக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் உறுதியான அடித்தளத்தில் நிலைநிறுத்துவதற்கும் இவை உதவியுள்ளன.

சவாலான உலகளாவிய வெளிப்புறச் சூழலில் உள்ள பல பொருளாதாரங்களைப் போலவே, சமீபத்திய உலகளாவிய முன்னேற்றங்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் புதிய அழுத்தங்களைக் கொண்டுவந்துள்ளன.

இவ்வாறான அதிர்ச்சிகளை எதிர்கொண்டு பயணிப்பது என்பது ஒருபோதும் எளிதான காரியம் அல்ல. எனினும், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தற்போதைய கொள்கை கட்டமைப்பு கணிசமான அளவில் வலுவாகக் காணப்படுகிறது - என்றார். (ச-இ)

## திறைசேரி நிதி விவகாரம் விசாரிக்கக் குழு வரவில்லை!

### அமெரிக்கா மறுப்பு


கொழும்பு,மே 25

விசாரணையின் நிமித்தம் அமெரிக்க எவ்.பி.ஐ. சிறப்புக் குழுவினர் எவரும் இலங்கைக்கு அனுப்பப்படவில்லை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

திறைசேரி நிதியிலிருந்து 2.5 மில்லியன் டொலர் இணைய வழித் திருட்டு மற்றும் அமெரிக்க அஞ்சல் அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டியிருந்த மேலும் 625,000 டொலர் திருட்டு ஆகியவற்றை விசாரிப்பதற்காக எவ்.பி.ஐ. அதிகாரிகள் கொழும்பு வந்துள்ளனர் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில் தூதரகம் விடுத்துள்ள மறுப்பறிக்கையில்,

பல நாடுகளில் உள்ள வழக்கமான நடைமுறையைப் போலவே, கோரிக்கை விடுக்கப்படும்போது, அந்தந்த நாட்டுத் தரப்பினருடன் சட்ட அமுலாக்க ஒத்துழைப்பை ஒருங்கிணைப்பதற்காக, அமெரிக்கத் தூதரகத்தில் எவ்.பி.ஐ சட்டத் தூதுவர் ஒருவரைப் பணியில் அமர்த்தியுள்ளது. மாறாக வேறு சிறப்புக் குழுவினர் யாரும் இலங்கைக்கு அனுப்பப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. (ச-44)



## மோ.சைக்கிள் மோதி பாதசாரி உயிரிழப்பு!

கொழும்பு,மே 25

ரஸ்நாயக்கபுர குருவிகுளம் தராலவத்த உப வீதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பானகமுவ பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண் எனத் தெரியவந்துள்ளது. மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் காயமடைந்து நிக்கவரெட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ரஸ்நாயக்கபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் குடிதண்ணீர்ப் போத்தல் சகல அரச நிறுவனங்களிலும் தடை






## மே 31 முதல் நடைமுறை

**கொழும்பு,மே 25**

**அனைத்து அரச நிறுவனங்களிலும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் மே 31ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.**

அனைத்து அரச நிறுவனத் தலைவர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தடைசெய்யப்பட்ட பிளாஸ்ரிக் பொருள்களை அரச நிறுவனங்களுக்குள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுற்றுச்சூழல் அமைச்சின் இணக்கப்பாட்டுடன் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதோடு, பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

இதற்கமைய, ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி, 2023 ஒக்ரோபர் 1 முதல் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் உணவுப் பொதிகள், தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள், கத்திகள், பூமாலைகள் மற்றும் இடியப்பத்தட்டுகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதோ அல்லது விற்பனைசெய்வதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியல், சமூக, மத மற்றும் கலாசார நிகழ்வுகளின் அலங்காரங்களுக்காக அனைத்து வகையான பொலித்தீன் தயாரிப்புகளைப் பயன்படுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது ள - என்றுள்ளது. (ச-இ)



அனுமதிப்பத்திரங்கள் இன்றி

## 22 மாடுகளைக் கடத்திய பாரவூர்தி மடக்கிப்பிடிப்பு!

கிளிநொச்சி,மே 25

கிளிநொச்சி, அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் பகுதியிலிருந்து எவ்வித சட்டபூர்வ அனுமதிப்பத்திரங்களும் இன்றி 22 கால்நடைகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று முகமாலை பகுதியில் வைத்துப் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. இதன்போது பாரவூர்தியின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை முட்கொம்பன் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் கால்நடைகள் கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, குற்றத்தடுப்புப் பொலிஸார் முகமாலை பகுதியில் விசேட வீதிச்சோதனைச் சாவடி ஒன்றை அமைத்துக் கண்காணிப்பில் ஈடுபட்டனர். இதன்போது, அந்த வழியாகவந்த சந்தேகத்துக்கிடமான பாரவூர்தியை மறித்துச் சோதனை செய்தபோதே, அதற்குள் திணித்து வைக்கப்பட்டிருந்த 22 மாடுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. பார ஊர்திக்குள் 22 கால்நடைகளும் எவ்வித சுகாதார வசதிகளுமின்றி, மூச்சுத்திணறக்கூடிய வகையில் மிகக் குறுகிய இடவசதிக்குள் மிருகத்தனமாகத் திணிக்கப்பட்டு ஏற்றி வரப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டுள்ள சாரதியும் மற்றும் மீட்கப்பட்ட 22 கால்நடைகளுடன் கூடிய பாரவூர்தியும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளன. சந்தேகநபரான சாரதிக்கு எதிராகக் மிருகவதைச் சட்டம் மற்றும் சட்டவிரோத கால்நடைப் போக்குவரத்துச் சட்டங்களின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவரை நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த கிளிநொச்சி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)


## யானை தாக்கி ஒருவர் சாவு!

அம்பாறை,மே.25

அம்பாறை - திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டமடு பகுதியில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யானை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நாவக்காடு பகுதியைச் சேர்ந்த 63 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர் மாடுகளுக்கு புல் வெட்டிக் கொண்டிருந்த போதே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



## முச்சக்கரவண்டி கவிழ்ந்து 3 மாதக் குழந்தை சாவு!

நிட்டம்புவ - ருவன்வெல்ல வீதியின் கோனகல பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 மாதக்குழந்தை உயிரிழந்துள்ளது. விபத்தின்போது வாகனத்தின்பின்இருக்கையில் பயணித்தபெண்ணும், அவரது குழந்தையும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் அவிசாவளைமருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்குசிகிச்சையின்போது 3 மாதமேயான பெண் குழந்தை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## பிள்ளையாருக்கு வந்த சோதினை-1

**'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' எண்டு தன்ர காலத்து நிலையை வைச்சு ஔவையார் பாடினதெல்லாம், இந்தக் கலி காலத்தில பொருந்தாது போல. இப்ப ஊர்வழிய சண்டை சச்சரவு வாறதெண்டாலே கோயிலாலதான் எண்டு நிலைமை மாறிட்டுது. கூடுதலா எல்லாக் கோயில்களிலையும் ஏதோ ஒரு பிரச்சினை வந்துகொண்டே இருக்குது. கிட்டடியில ஒரு கோயிலில- பிரச்சினையால கொடியேத்திறதுக்கு எண்டு குறிச்ச நேரத்தை விட பிந்தித்தான் கொடியேத்தினவை. அந்தளவுக்கு அமளி துமளி.**

**வலிகாமத்தில உள்ள ஒரு பிள்ளையார் கோயிலில தான் இந்தப் பிரச்சினை. அந்தக் கோயில் நிர்வாகத்தில இருக்கிற பொருளாளருக்கும், அதே கோயிலின்ர தொண்டர் சபைக்குமிடையில கொஞ்ச நாளா கடும் புகைச்சல். ரண்டு தரப்பும் ஆளையாள் மாறி மாறி அவையில பிழை, இவையில பிழை எண்டு குற்றம் சாட்டிக்கொண்டு கொழுவல் எடுத்திருக்கினம். இப்பிடிப்பட்ட நிலையில 'இப்ப இருக்கிற தொண்டர் சபையைக் கலைச்சுப் போட்டு நாங்கள் புதிசா தொண்டர் சபையைத் தெரிவுசெய்யப்போறம்' எண்டு நிர்வாகக்காரர் சொல்லியிருக்கினம். இது தொண்டர் சபைப் பெடியளுக்கு கடுப்பேத்த, 'அப்பிடியெல்லாம் யாப்புக்கு எதிரா கலைக்க ஏலாது' எண்டு நிண்டிருக்கினம். இப்பிடி ரண்டு தரப்பும் கீரியும் பாம்புமா நிக்கேக்க, கோயில் திருவிழாவும் வந்திட்டுது. வழக்கமா திருவிழாவுக்கு முதல் கோயிலைத் துப்புரவாக்கிறது, வாழை கட்டிறது எண்டு எல்லா வேலையளையும் தொண்டர்சபைக்காரர் தான் செய்யிறவை. அதைமாதிரி இந்த வருசமும் தொண்டர்சபைக்காரர் கொடியேத்தத்துக்கு முதல் கோயில் வீதியில இருந்த பள்ளம் திட்டிக்கு மண் கொண்டந்து பறிச்சிருக்கினம். உடனேயே 'எங்கட அனுமதி இல்லாமல் மண் பறிக்கினம்' எண்டு கோயில் நிர்வாகப் பொருளாளர் பொலிஸில முறைப்பாடு குடுத்திட்டார். பிறகு பொலிஸ் வந்து தொண்டர் சபைப் பெடியளைக் கொண்டுபோய் 'விளங்கிப்போட்டு' விட்டிட்டுது.**

**அதுக்குப் பொருளாளர் சும்மா இருக்கேலையாம். தொண்டர் சபைக்காரியாலத்தை பூட்டி அதின்ர திறப்பையும், ஐயாரிட்ட இருந்த கோயில் திறப்பையும் எடுத்துக் கொண்டு போட்டார். தொண்டர் சபைக் காரியாலத்துக்கதான் தொண்டர்கள் கட்டுற சால்வையள் இருந்திருக்கு.அந்தச் சால்வையக் கட்டினாத்தான் கோயில் சாமியைத் தூக்கலாம் எண்டது அந்தக் கோயிலின்ர விதியாம். அதால சீப்பை ஒழிச்சால் கலியாணம் நிக்குமெண்ட கதைமாதிரி 'சால்வையில்லாமல் இவையள் என்னெண்டு சாமி காவுகினம் எண்டு பாப்பம்' எண்ட நினைப்பில பொருளாளர் திறப்பைக் கொண்டு போயிருக்கிறார். ஆனால் இதுக்குப் பிறகும் பொறுத்திருக்க ஏலாது எண்டு தொண்டர் சபையும், உபயகாரரும், சனங்களும் ஒண்டாச் சேர்ந்து ஒரு வேலையில இறங்கிச்சினம்.**

**அது என்ன வேலை? கடைசியா என்ன நடந்தது? எண்டு நாளைக்குப் பாப்பம்.**

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட அரைமரதன் ஓட்டப் போட்டியில், நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவி யோ.திலுக்சி ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன், பு.அமல அசிம், ம.மரிய மெல்வின், ஆ.அபிசாளினி, ஆகியோர் முதல் 15 இடங்களுக்குள் ஓடிமுடித்து பாடசாலைக்குப்பெருமை சேர்த்துள்ளனர். (க)

# தொழில் கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,மே 25

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் இந்த ஆண்டின் அரையாண்டுக்கான முழுநேரக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பால் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர்,வெதுப்பாளர்,சமையலாளர், அறை பராமரிப்புச் சேவையாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கரவண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தைப் பராமரிப்பாளர், பெண்கள்,சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சிகை அலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், விரைவுச் சேவை உணவு வழங்குநர், முதியோர் பராமரிப்பாளர், டீசல், பெற்றோல் வாகன இயந்திரப் பொறிவலர், கட்டட நிர்மான உதவியாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினிப் படவரைஞர், குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்துநர், மரவேலைத் தொழில்நுட்பவியலாளர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழிற்தகமை மட்டம்4 (NVQ4 )சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். ஆர்வமுடையவர்கள் தங்களது பதிவுகளை எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி வீரசிங்கம், இலக்கம் 12, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு 02 12227949,0710318737,0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (க)



# கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் நெடியகாடு அணி மூன்றாமிடம்

வல்வெட்டித்துறை,மே 25

வல்வை ஒன்றியத்தின் ஏற்பாட்டில், ரேவடிக் கடற்கரையில் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்ற வல்வெட்டித்துறை கோடைகால பெருவிளையாட்டு விழாவில், பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில்,நெடியகாடு விளையாட்டுக்கழகம் வீராங்கனைகள் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில், தங்களது அபார திறமைகளை வெளிப்படுத்தி, பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் பிரிவில், மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (க)

# ஆடியபாதம் வீதியின் சீரமைப்புக்கு அளவீடு

யாழ்ப்பாணம்,மே 25

திருநெல்வேலிச் சந்தி ஆடியபாதம் வீதியின் இரண்டு பக்கங்களும், வெள்ள நீர் வழிந்தோடுவதற்கு ஏற்றவகையில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான அளவீட்டுப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



நல்லூர்ப்பிரதேசசபை நிதியிலிருந்து, வீதி அபிவிருத்தித் திணைக்களகத்தின் மேற்பார்வையில் குறித்த வீதி புனரமைக்கப்படவுள்ளது. (க)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 7 கடற்கரைகள் சிரமதானம்

கிளிநொச்சி,மே 25

'சுத்தமான கடற்கரை - கவர்ந்திழுக்கும் சுற்றுலாத்தலம்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 7 கடற்கரைப் பிரதேசங்களைச் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், 55 படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் இனோச் கேரத் ஆகியோர் தலைமையில் விநாசியோடை கௌதாரி முனைக் கடற்கரையில் ஆரம்ப சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்கள், கண்ணாடியிலான கழிவுப் பொருள்கள், இலகுவில் உக்கக்கூடிய கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டன. இதில்அரசதிணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், கடற்றொழில் சார்ந்த அமைப்பினர், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொலிஸ், முப்படையினர், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர். (க-113-பி)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்குத் தாய் வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும்.

**மகரம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம்கேட்ட உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# சபித்தலின் காலம் தொடரவேண்டுமா?

புதிய அரசியலமைப்பு விடயத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை திசைகாட்டி அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என்றவாறாக வலியுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். ஜனாதிபதி அநுரவும், அவருடைய கட்சியினரும் புதிய அரசியலமைப்புத் தொடர்பில் மக்களுக்கு ஏராளமான வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளை பூர்வாங்க அடிப்படையில் செயற்படுத்தவும் செய்தனர். அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்களிடம் கருத்தறியப்படும், வெளிப்படையான விவாதங்கள் நடத்தப்படும் என்றெல்லாம் அவர்கள் கூறியபோதிலும் அண்மைய வாரங்களாக அதுதொடர்பான பேச்சுகளும், செயற்பாடுகளும் கடலில் வீசப்பட்ட கல் போன்று காணாமற் போய்விட்டன. எனவே, இத்தகைய காலச்சூழலில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனால் திசைகாட்டி அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள நினைவூட்டல் வரவேற்கப்பட வேண்டியதே.

நவீன இலங்கையின் வரலாற்றில் அரசியலமைப்புப் பணிகளை சிறப்பான முறையில் முன்னெடுத்த அரசாங்கம் என்றால் அது ஜனாதிபதி மைத்திரியின் அரசாங்கம்தான். மைத்திரி-ரணில் ஆட்சிக்காலத்தில் ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் அரசியலமைப்புச் சபையாக மாற்றப்பட்டு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், காலப் போக்கில் அதிகாரக்கதிரைகளில் ஏற்பட்ட தன்முனைப்புப் போட்டியாலும், வலதுசாரிக் குழுக்களின் இனவாதப் பரப்புரைகளாலும் அந்த நடவடிக்கைகளைக் கைவிட வேண்டியதாயிற்று. எனவே, அந்த முன்னெடுப்புகளை மூலத்திட்டங்களாகக் கொண்டு, சிறுபான்மைக் கட்சிகளின் குரலுக்கும் செவிசாய்த்து விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ளது. அதை அவர்கள் செயற்படுத்த வேண்டும். அத்துடன், கடந்த அரசியலமைப்புச் சபையில் பேசப்பட்ட அதிகாரப்பகிர்வுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இருவேறு நிலைப்பாடுகள் உள்ளன. அவை தொடர்பிலும் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம்.

'புதிய அரசியலமைப்பின் ஊடாக சமவுரிமை நிலை நாட்டப்படும். அந்த அரசியலமைப்பு தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்' என்று கடந்த ஒன்றரை வருடங்களில் இருபதுக்கும் மேற்பட்ட தடவைகள் அநுர தரப்பினர் தெரிவித்துள்ளனர். அவர்கள் தங்களின் கருத்துகளை-வாக்குறுதிகளை-நிறைவேற்ற வேண்டியது அவசியம். ஆனால், ரணிலின் பாணியில் காலத்தைக் கடத்தும் கைங்கரியத்தைக் கைக்கொள்ளாமல், ஒரு கால எல்லையைக் குறிப்பிட்டு அதற்குள் புதிய அரசியலமைப்பை உருவாக்கவேண்டும். இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்தமைக்கு முன்னாள் ஜனாதிபதிகள் அனுபவித்த பகட்டு வாழ்க்கை துணைக்காரணம் என்றால், நீண்டகால இனப்பிரச்சினையே முதன்மையான காரணம். இதற்கமைய மேற்கொள்ளும் முன்னெடுப்பிலேயே தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் இருப்பும் தங்கியுள்ளது.

நாட்டின் ஏழு தசாப்த அரசியலை 'சபிக்கப்பட்ட காலம்' என்று ஜனாதிபதி அநுர முன்பொரு தடவை கூறியிருந்தார். அவருடைய கருத்தில் நியாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால், அந்தச் சபிக்கப்பட்ட காலப்பகுதியின் மிச்சங்களையும், சொச்சங்களையும் காவித்திரிவாராயின் அநுரவுக்கு வரலாற்றில் இடமேயிருக்காது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







## பொய்யாமொழி

**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்**

**பொருள்:** அறியவேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகப் பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.



### பெரிய வெங்காயத்துக்கான

# விதைகள் உற்பத்திக் கிராமம் அநுராதபுரத்தில் விரைவில்!

**அநுராதபுரம், மே 25**
**பெரிய வெங்காய விதை உற்பத்திக் கிராமமொன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இதற்கமைய, அநுராதபுரம் நாச்சதூவ குடியேற்றப் பகுதியை இவ்வாறு பெரிய வெங்காய விதை உற்பத்திக் கிராமமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வருடாந்த பெரிய வெங்காயத் தேவை 325,000 மெற்றிக் தொன்னாகும். உள்நாட்டில் சுமார் 50,000 மெற்றிக்தொன் பெரிய வெங்காயமே உற்பத்தி செய்யப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்திற்குள் உள்நாட்டு உற்பத்தியை 70,000 மெற்றிக் தொன் வரை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

தரமான பெரிய வெங்காய விதைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து, விதை இறக்குமதிக்காக செலவிடப்படும் செலவைக் குறைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## நுவரெலியாவில் கடும் பனிமூட்டம்

நுவரெலியா,மே 25
நுவரெலியாவின் பல்வேறு பகுதிகளில் கடும் மூடுபனி நிலவி வருகிறது.

நுவரெலியா நகருக்குள் நுழையும் பிரதான வீதிகள் அனைத்திலும் கடும் பனிமூட்டம் காணப்படுவதால், வாகனப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் நுவரெலியா-கண்டி மற்றும் நுவரெலியா-ஹற்றன் ஆகிய பிரதான வீதிகளே அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

தொடர்ந்து நிலவும் கடும் பனிமூட்டம் மற்றும் குளிரால், உள்ளூர் மக்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## நீரில் மூழ்கி ஒருவர் சாவு!

கொழும்பு, மே 25
மஹவ உனகஹயாய குளத்தில் நீராடிக் கொண்டிருந்த நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மஹவ பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



## 951,742 சுற்றுலாவிகள் 5 மாதங்களில் வருகை

கொழும்பு, மே 25
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 951,742 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த மாதத்தின் கடந்த 17 நாள்களில் மட்டும் 75,465 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



## ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை!

மொனராகலை, மே 25
மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மில்ல கலேவத்தை, பாலாறு பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் 28 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். இரு நபர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை- வைகாசி 12

26.05.2026

சுபநேரம் : 10.22 – 11.52
ராகுகாலம் : 02.52 – 04.22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முன்பள்ளிக் கல்விமுறையை சர்வதேச தரத்தில் மாற்றுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து


**கொழும்பு,மே 25**

**மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டு, முறைசாரா வடிவில் காணப்படும் தற்போதைய முன்பள்ளிக் கல்விமுறையை ஒழித்து, அதனை உலகளாவிய தரத்துக்கு இணங்கச் சர்வதேச தரத்திலான கல்விமுறையாக மாற்றியமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பெற்றோர்தங்களது பிள்ளைகளின் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் ஆரோக்கியத்துக்கு எப்போதும் முதலிடம் வழங்க வேண்டும்.

தற்போது நிலவும் பொருளாதாரச் சூழலில் மக்கள் தங்கள் அன்றாட அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாமல் தவித்து வருகின்றனர். ஒரு குழந்தை பிறந்தது முதல் 5 வயது வரையிலான ஆரம்பக் காலகட்டத்துக்குள் மட்டுமே அவர்களின் ஒட்டுமொத்த மூளை வளர்ச்சியானது 90 சதவீதத்தை அடைகிறது. இலங்கையில் தற்சமயம் 17,800க்கும் அதிகமான பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. எம் நாட்டில் இன்னமும் ஒரு முறைசாரா குழந்தைப் பருவ வளர்ச்சித் திட்டமே காணப்படுகிறது. உலகத் தரத்தின்படி, ஆரம்பக் குழந்தைப் பருவத்தில் இருந்தே தரம் 12 வரையான கல்விமுறையானது ஒரே சீராக வலுவூட்டப்படவேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் குறைந்தபட்சம் பாலர் பாடசாலைக் குழந்தைகள் அனைவருக்குமாவது முறையான ஊட்டச்சத்து மதிய உணவு வேலைத்திட்டத்தை ஒரு 'தேசிய கொள்கையாகப்' பிரகடனப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும். எனவே, இன்னும் ஓரிரு வருடங்களில் முறையான பாடசாலைக் கல்விக்குள் நுழையவுள்ள இந்தக் குழந்தைகளுக்குச் சர்வதேச தரத்திலான முற்போக்கான கல்விமுறையை உருவாக்க அனைவரும் கட்சி பேதமின்றி அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்- என்றார். (ச-இ)




வவுனியாவில் போர் வெற்றிநாள் நேற்று நினைவுகூரப்பட்டது. இதன்போது பழைய பேருந்து நிலையப்பகுதியில் அமைந்துள்ள இராணுவச் சிலைக்கு, சிங்கள மக்கள் மற்றும் பௌத்த மதகுருமார் மரியாதை செலுத்தினர். (க-110-சி)



# விபத்தை ஏற்படுத்திய தனியார் பஸ்ஸின் வழி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்!

முல்லைத்தீவு,மே.25

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில், வெளி மாகாணத்தைச் சேர்ந்த தனியார் பேருந்தின் வழி அனுமதிப்பத்திரம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில், வெளிமாகாணத்திலிருந்து வருகைதந்த தனியார் பேருந்து, இருவர் மீது மோதியிருந்தது. விபத்தை ஏற்படுத்திய பின்னர் பொறுப்பற்ற விதத்தில் அந்தப் பேருந்து அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில், மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்தின் சாரதிக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பிலும், பயணிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை உடனடியாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்று, குறித்த பேருந்துக்கு எதிராக முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைவாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விபத்தை ஏற்படுத்திய தனியார் பேருந்தின் அனுமதிப்பத்திரத்தை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளது.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் போக்குவரத்துச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராகத் தொடர்ந்தும் இவ்வாறான கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-66பி)

# வல்வை.இரத்ததானச் சங்கம் சிவாஜிலிங்கத்துக்கு உதவி

யாழ்ப்பாணம்,மே 25

மூத்த தமிழ் அரசியல்வாதி எம்.கே. சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக, வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தினர் நேரடியாகச் சென்று ஒரு தொகை நிதியுதவியை வழங்கியுள்ளனர். சங்கத்தின் தலைவர் பாலச்சந்திரமூர்த்தி வீரசுரேந்திரன், உபதலைவர் சிவகுருநாதன் குருநீலன் ஆகியோர், நெடியகாட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்துக்கு நேரடியாகச் சென்று நிதியுதவியை வழங்கினர். (க-66)



# கடற்கரையோரங்களில் சிரமதானம் முன்னெடுப்பு

மன்னார்,மே 25

'அழகிய தீவு புன்னகைக்கும் மக்கள்' எனும் கருப்பொருளில் கிளீன் சிறிலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக, மன்னார் மாவட்டத்தில் கடற்கரையோரங்கள் நேற்றுமுன்தினம் துப்புரவு செய்யப்பட்டன.

முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரிப்பு அல்லிராணி கோட்டை சார்ந்த பகுதிகள், இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் சிரமதானம் செய்யப்பட்டது. இதன்போது குறித்த பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருள்கள்,கழிவுப்பொருள்கள் சேகரிக்கப்பட்டு, அகற்றப்பட்டன.

இதன்போது மன்னார் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகதீஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள், இராணுவத்தினர், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (க-56பி)

# நயினாதீவுக் கடற்கரையில் மாணவர்கள் சிரமதானம்

யாழ்ப்பாணம்,மே.25

அழகான கடற்கரை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத்தளம் என்ற கருப்பொருளில் நாடளாவிய ரீதியில் கடற்கரைகளைச் சுத்தம் செய்யும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.



இதன் ஓர் அங்கமாக, நயினாதீவுக் கடற்கரைப் பகுதிகளைச் சுத்தம் செய்யும் வேலைத்திட்டத்தை, நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று முன்னெடுத்தனர். மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் வழங்கினர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





மன்னார் ஜீவ ஊற்று அன்பின் கரம் அலுவலகம் ஊடாக மன்னார் பணங்கட்டுக்கொட்டுப் பகுதியில் பெண்களுக்கான தையல் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தற்போது இரண்டாவது கட்டமாக மாலை நேர தையல் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (ச-56)

# தேசிய விருதுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

மன்னார்,மே 25

தேசிய ரீதியிலான நாடகப் போட்டியில், 12 தேசிய விருதுகளைப் பெற்ற, மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கௌரவிக்கப்பட்டனர். விருதுகளைப் பெற்ற மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு நாடகங்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள், மன்னார் பேருந்து நிலையத்திலிருந்து பாண்ட் வாத்திய இசையுடன், கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுதர்சினி ஶ்ரீகாந்தன், முல்லைத்தீவு கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் மனோரஞ்சன் மற்றும் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-60-பி)



அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய பழைய மாணவன் நடனசிகாமணி ரமணன் நினைவாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட வித்தியாலய நுழைவாயில் அவரது பெற்றோரால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (ச-9)



# யாழ்.பல்கலையில் மரநடுகை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 25

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை மரநடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மரநடுகைத் திட்ட ஆரம்ப நாளில் 10 பயன்தரு மரக்கன்றுகளும், கடந்த வியாழக்கிழமை மேலும் 10 பயன்தரு மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன. தொடர்ச்சியாக மேலுமொரு தொகுதிப் பயன்தரு மரக்கன்றுகளை நடுகை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-66)



# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த உதவி வழங்கல்

யாழ்ப்பாணம்,மே 25

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வான ஆன்மிகச் சொற்பொழிவும், நிதியுதவி வழங்கலும், ஆச்சிரம மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சைவப்புலவர் இரா. செல்வவடிவேல் மகாபாரதம் தொடர் பற்றிய ஆன்மிகச் சொற்பொழிவை ஆற்றினார். தொடர்ந்து பதுளை ஹல்தும்முல்ல கோட்டக்கல்விக் காரியாலயத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக, கோட்டக்கல்வி நிர்வாக எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.


அத்துடன் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கமைய, வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியுதவியும் வழங்கப்பட்டது. (க-66-பி)



# மாதகல் கடற்கரை தூய்மைப்படுத்தல்

யாழ்ப்பாணம்,மே 25

அழகான கடற்கரை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளம் என்ற தொனிப்பொருளில், கடலோரத் தூய்மைப்படுத்தல் தேசிய வேலைத்திட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதகல் கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. பிரதேச செயலகத்தினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பிரதேசசபை ஊழியர்கள், சமூகமட்ட அமைப்புகளின் அங்கத்தவர்கள், கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து கடற்கரையில் சிரமதானம் மேற்கொண்டனர். (க)



கடலோரத் தூய்மைப்படுத்தல் தேசிய வேலைத்திட்டத்தில், வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாட்டிக் கடற்கரை நேற்றுமுன்தினம் சிரமதானம் செய்யப்பட்டது. வேலணைப் பிரதேச செயலர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதேசசபையின் தவிசாளர், உத்தியோகத்தர்கள், கடற்றொழிலாளர் சங்கத்தினர், தப்ரபேன் கடல் உணவு பதப்படுத்தும் ஊழியர்கள், வேலணைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடற்படையினர், ஊர்காவற்றுறை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் இணைந்து சிரமதானத்தை மேற்கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி

## புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

அம்பிகை அடியார்களே!

பராபவ வருடம் வைகாசி மாதம் 12ம் நாள் 26.05.2026 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நவக்கிரக பெருமானுக்கு விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை நடைபெறவுள்ளது.

"இப் பூஜையில் கலந்து கொள்ள விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும்."

தொடர்புகளுக்கு : 077 717 4279

(CS/31868) J-1




# தேசிய,மாகாணப் போட்டிகளின் வெற்றியாளர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி,மே 25

சமூக, விஞ்ஞானப் போட்டிகளில் மாகாணம் மற்றும் தேசிய மட்டங்களில் வெற்றி பெற்ற, தென்மராட்சி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி மாணவரும், இரண்டாம் இடத்தைக் வரணி மத்திய கல்லூரி மாணவரும், மூன்றாம் இடத்தை நாவற்குழி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவரும் பெற்றிருந்தனர்.

அதேவேளை மாகாணமட்டத்தில் தென்மராட்சியில் 27 மாணவர்கள் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் உதவி கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், உத்தியோகத்தர்கள்,ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க-159பி)


# INVITATION FOR BID 2026-01

## ZONAL EDUCATION OFFICE -THENMARADCHY

1. The **Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Zonal Education Office – Thenmaradchy, Hensman Road Chavakachcheri.** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the below table.

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB). All Works Shall be funded with Line Ministry.**

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million"**

4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the **Schedule** (Section 5) for SBD 3 Documents.

5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **25/05/2026 To 08/06/2026** in between 09:00 hrs and 15:00 hrs.

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Zonal Director of Education, Zonal Education Office – Thenmaradchy,**

   **Hensman Road, Chavakachcheri. (T.P:0212270786, Fax:0212270013), email:zeothenfinance@gmail.com) from 09:00 hrs to 15:00 hrs. during the period from 25/05/2026 To 08/06/2026 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurment committee , Zonal Director of Education, Zonal Education Office – Thenmaradchy, Hensman Road Chavakachcheri. on or before 14:00PM at 09/06/2026.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Zonal Education Office – Thenmaradchy, Hensman Road Chavakachcheri** commencing at 10:30:00 AM on 02/06/2026.

9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | from 25/05/2026 To 08/06/2026 (from 09:00 hrs to 15:00 hrs) |
| | Pre-Bid Conference | At 02/06/2026 on 10:30:00 AM |
| | Closing and Opening of Bids | At 09 /06/2026 on 14:00:00 PM |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/41/20/05/03/L.M/2026/01 | Renovation of two storied building calls TV Room at J / Chavakachcheri Hindu College | 6.56 | 90 | C8 or above (Buildings) | 4,000.00 | 66,000.00 | 22/09/2026 | 25/08/2026 |
| NP/41/20/05/03/L.M/2026/02 | Renovation of Class rooms related facilities (Two Story Building) at J / Chavakachcheri Hindu College | 4.93 | 90 | C8 or above (Buildings) | 3000.00 | 50,000.00 | 25/08/2026 | 28/07/2026 |

**Chairman**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office – Thenmaradchy,**
**Hensman Road Chavakachcheri.**

(cr.47584) (N-1)


# சான்றிதழ் வழங்கலும் விண்ணப்ப நிகழ்வும்

மன்னார்,மே 25

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையும் இணைந்து நடத்தும், திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வும், இணையவழி மூலமான பண்ணிசைப் பயிற்சிநெறியை நிறைவு செய்த 4ஆம் அணி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், மன்னார் திருக்கேதீச்சரம் அன்னபூரணி கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வும், பிற்பகல் 2.30 மணிக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ. உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(க)

# தமிழ்த்தேசியமக்கள் முன்னணி சிவாஜிலிங்கத்துக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,மே 25

மூத்த தமிழ் அரசியல்வாதி எம்.கே.சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக, வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் ஆறு பேர் நிதியுதவி வழங்கியுள்ளனர். உறுப்பினர்களான பத்மநாதன் சாருஜன், குலத்துங்கம் வில்வராசா, சண்முகவடிவேல் செல்லகாந்தன், லயிதரன், சந்திரன் தயானி, அனுசா ஆகியோர் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவியை வழங்கியுள்ளனர்.

(க-66-பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராம் யுரேனியத்தைக்கூட ஒப்படைப்பதற்குத் தயாரில்லை



## ஈரானின் உச்ச தலைவர் மொஜ்தபா அதிரடி

**வொஷிங்டன், மே 25**

**ஈரானிடம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தில் ஒரு கிராமையேனும் மூன்றாம் தரப்பிடம் ஒப்படைக்கும் எண்ணம் இல்லை என்று, அந்த நாட்டின் உச்சதலைவர் மொஜ்தபா கமேனி தெரிவித்துள்ளார்.**

அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான 400 கிலோவுக்கும் மேற்பட்ட யுரேனியம் ஈரானிடம் தற்போது இருப்பில் உள்ளது. அவற்றை ஒப்படைத்தால் போர்நிறுத்தம் செய்யப்படும் என்றும், இல்லையேல் ஈரானுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்படும் எனவும் அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். இதற்குப் பதிலடியாகவே ஒருகிராம் யுரேனியத்தைக்கூட கைவிடத் தயாரில்லை என ஈரானின் உச்சதலைவர் மொஜ்தபா கமேனி கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுப்படைகளின் மிரட்டலுக்குப் பணியும் நிலையில் ஈரான் இல்லை. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறுவதுபோன்று ஈரான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், எமது பதிலடி மிகவும் கடுமையாக இருக்கும். அமெரிக்க-இஸ்ரேல்கூட்டுப்படையை எதிர்த்துப் போராடும் முடிவில் ஈரானின் வலிமைமிக்க இராணுவம் உறுதியாக உள்ளது -என்றார். (ம)



கியூபாவின் முன்னாள் தலைவர்

# ரவூல் காஸ்ரோமீது குற்றவியல் வழக்கு!

## அமெரிக்கா புதிய 'ஸ்கெட்ச்'


ஹவானா, மே 25

கியூபாவின் முன்னாள் தலைவரான ரவூல் காஸ்ரோவுக்கு எதிராக அமெரிக்காவின் பெடரல் நீதிமன்றத்தில் குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

1996ஆம் ஆண்டு அமெரிக்கா - கியூபா இடையில் பயணித்த இரண்டு சிறிய விமானங்கள் கியூபப் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்தத் தாக்குதலில் மூன்று அமெரிக்கர்கள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர். இது இலக்குத் தவறிய தாக்குதல் என ஆரம்பத்தில் கூறப்பட்ட நிலையிலேயே 30 வருடங்களின் பின்னர் தற்போது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது கியூபாவின் இராணுவத் தளபதியாக பிடல் காஸ்ரோவின் சகோதரர் ரவூல் காஸ்ரோ இருந்தார். அதன் அடிப்படையிலேயே 94 வயதுடைய ரவூல் காஸ்ரோவுக்கு எதிராகத் தற்போது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஈரானைத் தொடர்ந்து கியூபாவைக் கைப்பற்றுவோம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறிவருகின்றார். இதனால், போர்ப்பதற்றம் தொடர்ச்சியாக நீடிக்கும் ஆபத்து உள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர். இவ்வாறான நிலையிலேயே ரவூல் காஸ்ரோவுக்கு எதிராக அமெரிக்காவின் பெடரல் நீதிமன்றத்தில் குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. (ம)

# இஸ்ரேலின் பிரதமராக பொறுப்பேற்கத் தயார்!

## ட்ரம்ப் பரபரப்பு அறிவிப்பு



வொஷிங்டன், மே 25

இஸ்ரேல் பிரதமராகப் பொறுப்பேற்பதற்குத் தயாராக உள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:-

இஸ்ரேல் ஒரு மிகச் சிறப்பான நாடு. அங்கு எனக்கு 99 வீதமான ஆதரவு உள்ளது. அமெரிக்காவில் எனது பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் இஸ்ரேலுக்குச் செல்வது தொடர்பில் நான் சிந்தித்து வருகின்றேன். இஸ்ரேல் பிரதமராகப் போட்டியிடுவதற்குச் சாத்தியம் ஏற்பட்டால் நிச்சயம் அதைச் செய்வேன். பிரதமர் நேதன்யாகுவின் ஆட்சியில் இஸ்ரேல் மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளது. எனினும், இஸ்ரேலின் ஆளும் கூட்டணிக்குள் உள்ள உட்கட்சிப் பூசல்களால் நேதன்யாகுவின் வெற்றிகள் பெரியளவில் பேசப்படவில்லை -என்றார். (ம)

ஈரானுடனான போரில்

# 42 விமானங்களை இழந்த அமெரிக்கா



வொஷிங்டன், மே 25

ஈரானுடனான மோதலின்போது 42 போர் விமானங்களை அமெரிக்கா இழந்தது என்று அமெரிக்க நாடாளுமன்றக் குழுவொன்றின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரானுக்கும், இஸ்ரேல் அமெரிக்கக் கூட்டுப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரின்போது, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள படைத்தளங்கள் மீது ஈரான் சரமாரியான தாக்குதல் நடத்தியது. இதன்போதே அமெரிக்காவின் 42 போர் விமானங்களை ஈரான் அழித்தது என்று அமெரிக்க நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் போருக்காக 29 பில்லியன் டொலரை அமெரிக்கா செலவிட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


# எபோலாவைக் கட்டுப்படுத்த 60 மில்லியன் டொலர்

## விடுவித்தது ஐ.நா.

வொஷிங்டன், மே 25

ஆபிரிக்க நாடுகளில் பர்விவரும் எபோலா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை 60 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடுகளான உகண்டா, கொங்கோ, சூடான் ஆகிய நாடுகளில் எபோலா வைரஸ் வேகமாகப் பரவிவருகிறது. இந்த வைரஸ் மனிதர்களை எளிதில் தாக்கக்கூடியது என்பதால், அந்த நாடுகளில் மிகவும் அச்சப்பாடான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே, எபோலாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக ஐக்கிய நாடுகள் சபை 60 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. (ம)





சீனாவில்

# இடிந்தது சுரங்கம் எகிறியது சாவு!

பீஜிங், மே 25

சீனாவின் வடக்குப் பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்கமொன்று இடிந்து வீழ்ந்த நிலையில், அதில் பணியாற்றி வந்த 90 பேர் உயிரிழந்துள்ளனர். சீனாவின் ஷான்சி மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சீன இராணுவமும், தீயணைப்புப் படையினரும் இணைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மீட்கப்பட்ட பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விக்ரக பிரதிஷ்டை

கொக்குவில் யாழ்.விஷன் விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் ஆலயத்தின் முன்பிரகாரத்தில் கருகல்லிலான நந்தி விக்ரக பிரதிஷ்டை இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற வுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். (க)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 31 . 07 . 1974



இறைவன் மடியில் 20 . 05 . 2013

### அமரர் திரு. மதியாபரணம் மதிவதனன்

(கரைத்துறைபற்று பிரதேசசபை முல்லைத்தீவு)

நொடிக்கூட உன்னை நினையாமல்,
இருக்க முடியவில்லை!
உலகறியா குழந்தையைப் போல்,
ஏங்கி நிற்கிறேன்,
நீ எங்கிருந்தாவது வந்து விடமாட்டாயா என்று !
எங்கிருந்தாலும் பத்திரமாய் இருங்கள்....
கனவிலாவது சந்திப்போம்!
இப்படிக்கு உண்மை அறிந்தும் உங்கள்
வருகையை எதிர்பாத்து கொண்டிருக்கும்

**உங்கள் மகள்....**

**மனைவி, மகள்,**
**அக்கா, அத்தான், மருமக்கள்.**

(cs.61511 (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 09 . 1970



மறைவு 23 . 05 . 2026

### குணரத்தினம் தர்மசீலன்

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் தர்மசீலன் அவர்கள் கடந்த (23.05.2026) சனிக்கிழமை அன்று அகால்மரணம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற குணரத்தினம் - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், கனகரத்தினம் - மனோராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கலைச்செல்வியின் அன்புக்கணவரும், லக்சியா, மிதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்கையற்கரசி (கனடா), தனசீலன் (UK), மனோரஞ்சனி, விஜயமாலா, சத்தியசீலன், காலஞ்சென்ற ஜெயசீலன் , காலஞ்சென்ற மோகனசீலன், புஷ்பராணி (சாந்தி - Swiss), சிவசாந்தினி (கண்ணா - Swiss) ஆகியோரின் அன்புச் சகோதரரும், துஷ்யந்தன், தனேந்திரன் (Swiss), புவனலோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2026) திங்கட்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS/47591) J-1

## தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் அதிகாரப்பகிர்வு பகற்கனவே!

கலாநிதி விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும், தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு கிடைப்பது சாத்தியமற்றது என்று வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண முதலமைச்சரின் முன்னாள் செயலாளர் கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றத்தை ஏற்படுத்துவோம் என தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜே.வி.பி.யும், தற்போதைய தேசிய மக்கள் சக்தியும் தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வை வழங்குவது என்பது பகற்கனவு. இலங்கையில் தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரிக்காத சிங்கள ஆட்சியாளர்கள், இன்னும் இரண்டாம் தரப் பிரஜைகளாக மட்டுமே பார்ப்பதால், அதிகாரப்பகிர்வை வழங்க மறுக்கின்றனர். தேசிய மக்கள் சக்தி மாகாண அதிகாரங்களை இல்லாமல் ஒழிப்பதற்காக, பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்ற நிலையில், பிரதேச சபைகளின் அதிகாரத்தை இல்லாமல் செய்து 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை வலுவிழக்கச் செய்யும் நோக்கில், சட்ட நடைமுறைகளுக்கு முரணாக பிரஜா சக்தி குழுக்களை உருவாக்கி இருக்கின்றது. தமிழ் அரசியல்வாதிகள் இந்த விடயங்களை நன்கு அறிந்தும், ஒற்றுமையுடன் எதிர்க்கத் தவறியுள்ளனர். 13 ஆவது திருத்தம் மாகாண சபை முறையை அமுல்படுத்துவதன் மூலமே, தமிழ் மக்களின் குறைந்தபட்ச அதிகாரங்களையாவது தக்க வைத்துக்கொள்ள முடியும்-என்றார். (க-20பி)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 04 . 1942



மறைவு 22 . 05 . 2026

### திருமதி நல்லையா பரமேஸ்வரி (இராசமணி)

(செல்வம் பேக்கரி - சோளங்கன் கரணவாய் மேற்கு)

கரணவாய் மேற்கு சோளங்கனை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா பரமேஸ்வரி (இராசமணி) அவர்கள் 22.05.2026 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்ற பொன்னையா-ஆயிலியம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம்-செல்லம்மா அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் நல்லையா (பேக்கரி நல்லையா) அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்றவர்களான கண்மணி, மனோன்மணி, மார்கண்டு மற்றும் விஸ்வலிங்கம் (பிள்ளையார் மணியம்) அன்னலட்சுமி மற்றும் மாசிலாமணி ஆகியோரின் சகோதரியும், தவமணி, தில்லையம்பலம், கிருஸ்ணவேணி, சின்னம்மா(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆனந்தமலர் (கனடா) நவரஞ்சிதமலர் (சாவகச்சேரி), தர்மரத்தினசிங்கம் (தருமன்-சுவிஸ்), செல்வமலர் (செல்வா-கனடா), ஜெயமலர் (ஜெயா-கனடா), கிருஸ்ணதேவி (தேவி - சமுர்த்தி உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தவபாலசந்திரன் (இராசன்-கனடா), நந்தகுமார் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர், சாவகச்சேரி), றோசாறியோ (சறோ-சுவிஸ்), கணேசதாசன் (செல்வம்-கனடா), யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபறஞ்சினி (வினோ) - குகனேந்திரராசா (குவேந்திரன்), றேணுகா- திருமாறன் (லண்டன்), ஜெயந்தன்-கவிதா (பிரபு-கனடா), ஜெனார்த்தன்(கனடா), துஸ்யந்தன்(கனடா), சஞ்சேயன்-தமிழினி (Northern Engineering Solutions), கேகயன் (PhD Candiidate, Bio Engineering, நியூசிலாந்து), ஸ்ரிபன் (Electrical Engineer, சுவிஸ்), யெநாத்தன்(Automobile Engineer, சுவிஸ்), டிலான்(வங்கி முகாமையாளர், சுவிஸ்), தமிழினி (Medical research Manager, கனடா), யாழினி (BioMedical Engineer, கனடா),தர்மினி (Accountant, கனடா), கேனுசன் (Ryerson University 2ம் வருடம், கனடா), ஜெனுசன் (York University முதலாம் வருடம், கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சுபீந்தன், சுகீபன் (Abisan Super Mart, Nelliyadi), கவிசா (லண்டன்) அவந்திகா (கனடா) அபீசன் (கனடா) அகரன் ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 25.05.2026 (திங்கட்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் பூவரசம்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 421 4893**

### 226 பேருக்கு...

டைய 226 பேரைக் கைது செய்வதற்கு சர்வதேச சிவப்பு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஷாந்த சொய்சா இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சிவப்பு அறிவித்தல்கள் மூலம் 35 சந்தேகநபர்கள் உட்பட பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சுமார் 130க்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் இதுவரை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். தற்போது சர்வதேசப் பொலிஸாரின் உதவியுடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள 226 சிவப்பு அறிவித்தல்களில் சுமார் 90 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் டுபாய், இந்தியா, ரஷ்யா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் பதுங்கியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் அனைவரையும் விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சர்வகட்சி...

இது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எவையும் இதுவரை வெளியாகாத போதும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே சந்திப்பொன்று நடந்துள்ளது என்ற தகவல்களும் வெளியாகியிருக்கின்றன.

உலகளாவிய நெருக்கடி நிலைமையால் இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நிலைமையைச் சமாளிப்பது, எதிர்க்கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளைக் குலைப்பது எனப் பல திட்டங்களுடன் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆலோசிக்கின்றார் என்று கூறப்படுகின்றது. சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்திக்குள் பெரியளவிலான எதிர்ப்பு இல்லை என்றும் கூறப்படுகின்றது.

அதேநேரம், கடந்த சில நாள்களாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீட்டில் பல முக்கியமான சந்திப்புகள் நடந்தன என்றும், அதில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர் என்ற தகவல்களும் வெளியாகியிருக்கின்றன. இந்தத் தகவல்களால் கொழும்பு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது. (அ-எ-இ)

## ஆஸி....

மேற்கொள்கின்றார். நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் மற்றும் ஆஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பென்னி வோங் ஆகியோருடன் இரு தரப்பு சந்திப்பில் ஈடுபடவுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவும் அவர் கலந்துரையாடவுள்ளார்.

இரு நாடுகளிலும் உள்ள மூத்த அரசாங்கப் பிரதிநிதிகள், அதிகாரிகள், வணிகத் தலைவர்கள், கல்வியாளர்களையும் விஜித ஹேரத் சந்திக்கவுள்ளார். நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர் இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளார். (அ-எ-இ)

## திடீரென...

செய்த மிகப்பெரிய ஒருநாள் வளர்ச்சி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் ஆசியாவிலேயே மிகச் சிறந்த முறையில் செயற்பாட்டு நாணயமாக இலங்கை ரூபா மாறியுள்ளது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடமிருந்து இலங்கைக்கு நிதி கிடைக்கவுள்ள நிலையில், சந்தையிலுள்ளவர்கள் தங்களிடமுள்ள டொலரை விற்பனை செய்ய முற்பட்டதே ரூபா வலுவடைவதற்குக் காரணம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது என்று அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ரூபாவின் மதிப்பை நிலைப்படுத்துவதற்காகத் தனிப்பட்ட வாகன இறக்குமதியின் மீது கூடுதல் கட்டணத்தை விதிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை மத்திய வங்கியும் தேவையான சந்தர்ப்பங்களில் சந்தை நடவடிக்கைகளில் தலையிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

## இயலுமென்றால்...

சன்ன குணசேன சவால் விடுத்துள்ளார். பொது நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் மீது அழுத்தங்கள் தீவிரமடைந்துள்ளன. ராஜபக்ச குடும்பத்தினருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும், அவர்களுக்கு எதிராக எந்தச் சட்டநடவடிக்கையும் எடுக்கமுடியாது என்ற கதை கடந்த காலங்களில் இருந்தது.

ஆயினும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக எதிர்வரும் காலங்களில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ-எ-இ)

## சர்வகட்சி அரசு...

யன் பத்திரிகைக்கு தொலைபேசி ஊடாக வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு முயற்சி இடம்பெறுகின்றது என்ற தகவல் வெளியாகியுள்ளது. அதற்காக மஹிந்த சமரசிங்க, தூதுவர் பதவியை துறந்து இலங்கை வருகின்றார் எனவும், ஹர்ஷ டி சில்வா போன்றவர்களுடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் சில இணைய ஊடகங்களில் செய்தி வெளியானது.

இது தொடர்பில் பிரதி அமைச்சரிடம் கேட்டபோது, "தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அரசாங்கத்துக்குள் பேச்சு நடத்தப்படவில்லை. இது நூறு சதவீதம் பொய்யான தகவலாகும்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் எதிரணிதரப்பில் போலி தகவல்கள் பரப்பப்படுகின்றன. அந்த தகவலிலும் உண்மை இல்லை. சவாலை எதிர்கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்குரிய இயலுமை எமக்குள்ளது" என்று அவர் பதிலளித்தார். (அ-எ-44)

## மூளைக்காய்ச்சல்...

உயிரிழந்தார். மூளைக்காய்ச்சல் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## மூச்சுத்திணறலால்...

கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தை சேர்க்கப்பட்டது. நேற்றுக்காலை குழந்தை உயிரிழந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## மாகாண...

சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?" என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குத் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் நோக்கில் அதற்கான நிதியை நாங்கள் ஒதுக்கீடு செய்திருந்தோம். ஆனால் அவ்வாறு திட்டமிட்டிருந்த வேளையில் நாட்டில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதுடன், பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான நெருக்கடிச் சூழலும் உருவானது.

அனர்த்த நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்காக 500 பில்லியன் ரூபாய்களை ஒதுக்க வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது. அந்த நிதி தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியாகும். அதனாலேயே இந்த வருடத்தில் எங்களால் தேர்தலை நடத்த முடியாமல் போனது. அத்துடன், தற்போது சில புதிய சட்டப் பிரச்சினைகளும் எழுந்துள்ளன. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக இருந்த சட்டரீதியான வழிமுறைகளில் குளறுபடிகள் ஏற்பட்டதே இதற்குப் பிரதான காரணமாகும். தற்போது நாடாளுமன்றத்தில் ஒரு குழுவை நியமித்துள்ளோம். மாகாண சபைத் தேர்தலை எந்தச் சட்டத்தின் கீழ் நடத்துவது என்பது தொடர்பாக அந்தக் குழு ஆராய்ந்து வருகிறது. அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அதைப் பரிசீலித்து, அடுத்த வருடத்தில் வேறு ஏதேனும் பெரும் பிரச்சினைகள் ஏற்படாதுவிட்டால், பெரும்பாலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்று நம்புகிறோம்.

அதேவேளை, தேர்தலை நடத்த வேண்டும் என்று இந்தியத் தரப்பிலிருந்து எங்களுக்கு எந்தவிதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை. ஏனெனில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலும், இந்திய அரசாங்கத்துக்கும், எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் இடையிலும் மிகச் சிறந்த, நட்புறவானதொரு தொடர்பு நிலவுகிறது. எமக்கிடையே நல்லதொரு புரிதல் காணப்படுகிறது.

உண்மையைக் கூறப்போனால், வடபகுதி மக்களின் பிரதான பிரச்சினையாக இருந்த 'இனவாதம்' இல்லாத ஒரு நாட்டை நாங்கள் கட்டியெழுப்பியுள்ளோம். அதேபோல, வடபகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த பெருமளவிலான காணி நிலங்களை விடுவித்துள்ளதுடன், வீதிகளையும் திறந்துவிட்டு புதிய பாதைகளை அமைத்து வருகின்றோம். 'பிரஜா சக்தி' திட்டத்தின் கீழ் அடிமட்ட மக்கள் வரை அவர்களைப் பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். எனவே, தற்போது இத்தகைய பணிகளை நாங்கள் செய்து வருகிறோம். இது தொடர்பான புரிதல் இந்தியாவுக்கும் உண்டு. அதனால், இந்தியத் தரப்பில் இருந்து எங்களுக்கு எந்த அழுத்தமும் இல்லை. மிகவும் ஒத்துழைப்புடனும் புரிதலுடனும் நாங்கள் இணைந்து செயற்பட்டு வருகிறோம்-என்றார். (அ-எ-இ)

## தீர்மானிக்கும்...

கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மாகாணசபைத் தேர்தல் நடக்காது என ஜே.வி.பியின் செயலாளர் கூறியுள்ளார். தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அரசாங்கம் முடிவுகளை எடுக்கலாம். ஆனால் இது விடயத்தில் ஜே.வி.பி. செயலாளருக்கு உள்ள அதிகாரம் என்ன?

நாட்டில் பொருள்கள், சேவைகள் விலைகள் அதிகரித்துள்ளன. மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், மக்கள்மீது மென்மேலும் சுமைகள் திணிக்கப்படுகின்றன. வரிவிதிப்பு, கட்டண அதிகரிப்பு என்பவைதான் நெருக்கடியை தீர்ப்பதற்கான வழியா என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

எதிரணிகள் இல்லையெனக் கூறும் அரசாங்கம், முடிந்தால் தேர்தலை நடத்திக் காட்டட்டும்-என்றார். (அ-எ-இ)

## மாகாணத்...

சர் விஜித ஹேரத் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதிலேயே ஆணைக்குழு தனது தயார் நிலைமை தொடர்பில் வெளிப்படுத்தியுள்ளது. ஆயினும் தேர்தலுக்கான காலம் அந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்படவில்லை.

இறுதியாக 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நான்கு கட்டங்களாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன் பின்னர் கடந்த ஒரு தசாப்த காலமாக மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல்களுக்காக விகிதாசார மற்றும் தொகுதிவாரி முறைகளை இணைத்த புதிய கலப்பு தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்த முந்தைய அரசாங்கம் தீர்மானித்தது. அதற்காக எல்லைகளை மறுசீரமைக்க 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 5 உறுப்பினர்களைக் கொண்ட எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது. இதற்கு அப்போதைய தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமை தாங்கினார். இந்தக் குழு 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் தனது விரிவான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பித்தது. எனினும், இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அதற்குப் போதிய ஆதரவு கிடைக்காததால் நிராகரிக்கப்பட்டது. புதிய தேர்தல் முறைமைக்கான சட்டம் நிறைவேற்றப்படாததால், மாகாண சபைத் தேர்தல் இன்றுவரை சட்டரீதியான சிக்கல்களுடனும் அரசியல் சர்ச்சைகளுடனும் பிற்போடப்பட்டு வருகின்றது. (அ-எ-இ)

## நாட்டுக்குள்...

தடையக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அதனால் நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் மழைவீழ்ச்சி அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வழமையான வானிலை நிலவும் என்றும், நாளை முதல் எதிர்வரும் வியாழக்கிழமை வரையான நாள்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி கசுன் பெஸ்குவல் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த நாள்களில் பெய்த பலத்த மழையால் உயர்வடைந்திருந்த பிரதான ஆறுகளின் நீர்மட்டம் தற்போது வழமைக்குத் திரும்புகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு மாகாணத்தில் சிறுபோக நெற்செய்கை 1.74 இலட்சம் மெ.தொன் விளைச்சல் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், மே 25

**வடக்கு மாகாணத்தில் 2026ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற் செய்கையின் ஊடாக, 1.74 இலட்சம் மெற்றிக்தொன் நெல் அதி உச்ச விளைச்சலாக எதிர்பார்க்கப்படுகின்றது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஶ்ரீ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- இம்முறை மாகாணம் முழுவதும் 39 ஆயிரத்து 215 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஊடாக மாகாண ரீதியிலான நெல் உற்பத்தித் திறன் ஹெக்ரேயருக்கு 4.4 மெற்றிக்தொன்களாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி உள்ளிட்ட பல்வேறு நிதி மூலங்களின் ஊடாகக் குளங்களைப் புனரமைப்புச் செய்துள்ளமையால், அதி உச்ச விளைச்சல் இலக்கு சாத்தியமாகியுள்ளது. மாகாணத்திலேயே அதிகபட்சமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 ஆயிரத்து 805 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொண்டு, ஹெக்ரேயருக்கு 4.5 மெற்றிக் தொன் உற்பத்தித்திறன் அடிப்படையில், 62 ஆயிரத்து 123 மெற்றிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு அடுத்தபடியாக கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரத்து 523 ஹெக்ரேயர் நிலப்பரப்பில், 56 ஆயிரத்து 354 மெற்றிக் தொன் விளைச்சலும், வவுனியா மாவட்டத்தில் 8 ஆயிரத்து 601 ஹெக்ரேயர் நிலப்பரப்பில், 34 ஆயிரத்து 404 மெற்றிக்தொன் விளைச்சலும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 286 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், மாகாணத்திலேயே அதிகபட்ச உற்பத்தித்திறனாக ஹெக்ரேயருக்கு 5 மெற்றிக்தொன் அடிப்படையில், அங்கு 21 ஆயிரத்து 430 மெற்றிக் தொன் நெல் விளைச்சல் கிடைக்கும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய மழைவீழ்ச்சி மற்றும் சாதகமான காலநிலை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இந்த அளவீடுகளிலும், நெற்செய்கைப் பரப்பளவிலும் எதிர்காலத்தில் மேலும் சாதகமான திருத்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது- என்றார். (க-113-பி)





## கரையோரச் சுத்திகரிப்பு யாழில் வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம்,மே 25

'அழகான கரையோரம் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலம்' எனும் தொனிப்பொருளில் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கரையோரச் சுத்திகரிப்புப் பணி வேலைத்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பண நிகழ்வை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார். இலங்கை இராணுவத் தளபதியின் நேரடி வழிகாட்டலின் கீழ், பல்வேறு அரச நிறுவனங்களின் முழுமையான ஆதரவுடன் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் 256 கரையோரச் சுத்திகரிப்பு வேலைத்திட்டங்கள் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைவாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூலோபாயக் கரையோரப் பகுதிகளை உள்ளடக்கிய வகையில் நேற்று 30 சுத்திகரிப்பு வேலைத் திட்டங்கள் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன்படி 512ஆவது காலாட்படைப் பிரிகேடினால் யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைப் பகுதியில் இதற்கான பிரதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வேலைத்திட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், சுற்றுலாப் பணியகம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச அரச நிறுவனங்கள் ஆகியன ஒன்றிணைந்து செயற்பட்டன. (ச-20)

## பருத்தித்துறைக் கடற்கரையில் சிரமதானம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,மே 25

இலங்கையின் கரையோரப் பகுதிகளைத் தூய்மையாக்கும் செயற்றிட்டத்தில், பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. 52ஆவது படைப்பிரிவின் ஒழுங்கமைப்பில், பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர், சமூக அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர். இதன்போது கடற்கரையில் காணப்பட்ட கழிவுப்பொருள்கள் தரம்பிரித்து, சேகரிக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேசசபையின் திண்மக்கழிவகற்றும் வாகனத்தின் ஊடாக அப்புறப்படுத்தப்பட்டன. (க-100-பி)





## கிளிநொச்சி நகரில் விழிப்புணர்வுப் பேரணி

கிளிநொச்சி,மே 25

கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில், போதைப்பொருள் பாவனைக்கு எதிரான, விழிப்புணர்வுப் பேரணி, கிளிநொச்சி நகரில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பேரணி, கிளிநொச்சி பேருந்து நிலையம் வரை இடம்பெற்றது.

அங்கு போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகளும், விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றன. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். (க-113-பி)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் உயரப்புலம், ஆனைக்கோட்டையில்
பாரதி சனசமூக நிலைய முன் வீதியில் வலது
புறத்தில் முதலாவது வீட்டுடன் 06 பரப்பு (நிலப்பரப்பு)
காணியும் உடன் விற்பனைக்குண்டு.
விலை : 4 கோடி 70 லட்சம்
(தரகர் தேவையில்லை)
தொடர்பு:
+94 770 460 604

## தமிழ்த்தேசியத்தை நேசித்தவருக்கு கரம் கொடுப்பது தமிழரின் கடமை

### சுகாஷ் வலியுறுத்து!

தமிழ்த்தேசியத்தை நேசிப்பவர்களுக்கு இடர்வரும் போது கரம் கொடுக்க வேண்டியது ஈழத்தமிழரின் கடமை. இது சிவாஜிலிங்கத்துக்கு மாத்திரமன்றி எமக்காக உயிர்கொடுத்த மாவீரர்களின் குடும்பங்கள், அங்கங்களை இழந்த போராளிகளுக்கும் பொருந்தும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பான அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,-

தமிழ்த்தேசியத்துக்காகக் களமாடிய, களமாடும் ஒவ்வொருவருக்கும் ஈழத்தமிழினம் நன்றிக்கடன்பட்டுள்ளது. சிவாஜிலிங்கத்தின் மருத்துவச் செலவுக்காக 70 இலட்சம் ரூபா தேவைப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், உண்மையில் சத்திரசிகிச்சையின் பின்னரும், அவரைப் பராமரிக்கப் பாதுகாக்க இன்னும் நிதியுதவி தேவைப்படும். எனவே அவரது உடல்நலம் பலம்பெறச் சகல வழிகளிலும் தோள் கொடுப்போம்- என்றுள்ளது. (க-66-பி)

காணி விற்பனைக்கு
யாழ் அச்சுவேலி நவக்கிரியில் 6 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு.
* அச்சுவேலியிலிருந்து நிலாவரை செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில்
* ஒன்றரை (1 1/2) பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 15 அடி பாதையுடன்
* சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதி 200m தூரம்
* அச்சுவேலி நகரம் 2km
* பருத்தித்துறை வீதி 1km தூரம் (புத்தூர் சந்தி)
* நிலாவரை கிணறு 700m தூரம்
* செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
* ஒரு பரப்பின் விலை 22 இலட்சம் முதல் 18 இலட்சம் வரை
தொடர்புகளுக்கு:
077 2880 152, 076 7390 413
(CS 31869) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.